தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

&

இந்தியவானிலைத் துறை

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை

மயிலாடுதுறை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(13.05.2026 முதல் 17.05.2026)

அறிக்கை எண் 12/2026 தேதி. 12.05.2026

**மயிலாடுதுறை மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

மயிலாடுதுறை மாவட்டத்தின் 08.05.2026 முதல் 12.05.2026 வரையிலும் பகல் நேரவெப்பநிலை 29 - 35 $^{o}$செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 24 - 26 $^{o}$செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 100 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 91 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 0 - 6 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு வட கிழக்கு திசை வரை பதிவானது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை மயிலாடுதுறை (13.05.2026 முதல் 17.05.2026)**

| கடந்த வார வானிலை (08.05.2026 முதல் 12.05.2026) | | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 17.05.2026 - 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 08/05 | நாள்-2 09/05 | நாள்-3 10/05 | நாள்-4 11/05 | நாள்-5 12/05 | தேதி | நாள்-1 13/05 | நாள்-2 14/05 | நாள்-3 15/05 | நாள்-4 16/05 | நாள்-5 17/05 |
| 3.5 | 4.8 | 21.8 | 63.0 | 0.1 | மழை (மி.மீ) | 25 | 0 | 22 | 22 | 12 |
| 35 | 33 | 29 | 33 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 33 | 31 | 31 | 32 |
| 26 | 25 | 25 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 25 | 25 | 25 |
| 7 | 8 | 6 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 7 | 7 | 7 |
| 100 | 100 | 86 | 91 | 83 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 90 | 90 | 90 |
| 79 | 91 | 88 | 81 | 78 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 75 | 75 | 85 | 85 | 85 |
| 0 | 6 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 2 | 2 | 2 | 2 | 4 |
| வடக்கு | கிழக்கு வட கிழக்கு | வடக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | காற்றுவீசும் திசை | கிழக்கு வட கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் மேற்கு | தென் கிழக்கு | தென் தென் மேற்கு |

**மயிலாடுதுறை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 13.05.2026 முதல் 17.05.2026 ஆகிய தினங்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32 - 34 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 26 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 95 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 2 - 4 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது** | | மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும். |
| **நெல்** | **நாற்றாங்கால்** | கோடை பருவத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றாங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஜிப்சமும் ஒரு கிலோ டி.ஏ.பி. ஒரு சென்ட் நாற்றாங்காலுக்கு என்ற அளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களை பறிக்க உதவும். |
| **நெல்** | **நடவு வயல்** | நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக தழை, மணி, சாம்பல் சத்துடன் 10 கிலோ ஜிங்சல்பேட்டும், 200 கிலோ ஜிப்சமும் இடவேண்டும். |
| **வாழை** | | வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| **கால்நடைகளுக்கு** | **ஆடு மற்றும் மாடு** | 3 மாத வயதுடைய கன்று குட்டிகள் மற்றும் 2 மாத வயதுடைய ஆட்டு குட்டிகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடவும். |
| | | காற்றின் வெப்பநிலை 35 டிகிரி செல்சியசுக்கு மேல் அதிகரிக்கும் போது கறைவை மாடுகளின் தண்ணீர் குடிக்கும் அளவு அதிகமாவதோடு உலர் பொருள் உட்கொள்ளும் அளவு குறையும். இதனால் பால் உற்பத்தி குறைய தொடங்கும். எனவே பசுந்தீவனத்துடன் புரதசத்துள்ள பசுந்தீவனங்களை கொடுக்க வேண்டும். |

## குறுஞ்செய்தி

மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும்.

**இயக்குநர்**